தலைவர் / நிர்வாக அலுவலர், 89–பெருமாள்பட்டு ஊராட்சி, திருவள்ளூர் ஊரர்ட்சி ஒன்றியம்
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திரு. P. சீனிவாசன்,

செ.மு.ந.க. எண். 005 / 2023 – 2024 / ஊ.செ **நாள். 01.03.2024.**

பொருள் – மனைப்பிரிவு அனுமதி– திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் – பெருமாள்பட்டு ஊராட்சி – பெருமாள்பட்டு கிராமம் சர்வே எண். 181/12–ல் அடங்கிய 1550 ச.மீ (0.38 ஏக்கர்) – நிலப்பரப்பில் 09 மனைகளுக்கு மனைபிரிவு ஒப்புதல் வழங்க உத்திரவிடுதல் – சார்ந்து.

பார்வை – 1. உதவி இயக்குநர், நகர ஊரமைப்பு, திருவள்ளூர் மண்டலம் எண். 43 / 397A, இரண்டாம் தளம், அன்னை இந்திரா காந்தி சாலை, இராஜாஜிபுரம் பகுதி II, திருவள்ளூர் – 602 001 அவர்களின் ந.க. எண். 21UMT9PR / 2023 / TCP நாள். 26.10.2023.
2. தானபத்திர ஆவண எண். 15912 / 2023.
3. ஊராட்சி மன்ற தீர்மாண எண். 871 நாள். 10.01.2024

x x x

உத்தரவு –

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்பட்டு ஊராட்சியில் பெருமாள்பட்டு கிராமம் சர்வே எண். 181/12–ல் அடங்கிய 1550 ச.மீ (0.38 ஏக்கர்) நிலப்பரப்பை மனைபிரிவுகளாக அமைக்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களின் ந.க. எண். 21UMT9PR / 2023 / TCP நாள். 26.10.2023 மூலம் தொழில் நுட்ப ஒப்புதல் 09 மனைகளுக்கு உரிய தொகை அரசு மற்றும் உள்ளாட்சி நிதிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதால் 09 மனைகளுக்க ஒப்புதல் அளித்து பின்வரும் நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. 1994 ஊராட்சிகளின் சட்டம் மனைபிரிவு மற்றும் துணை விதிகளுக்கு உட்பட்டது.
2. மனைபிரிவு வரைப்படத்தில் உள்ளவாறு துணைபிரிவு செய்ய வேண்டும். உள்கட்டமைப்பு மற்றும் வெளிகட்டமைப்பு ஏதும் மாற்றம் செய்யக்கூடாது.
3. மனைபிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைபிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் அமைப்பு இருக்க வேண்டும்.
4. இவ்வாணையினை திருத்தம் செய்யவோ அல்லது நீக்கம் செய்யவோ தனி அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
5. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கிகரிக்கப்பட்டு SWP / DTCP / TVLR / Layout No. 228 / 2023 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்கள் வரையருக்கப்பட வேண்டும். மனிபிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5(ன்)படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைகற்கள் கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

6. தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், தூப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.
7. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
8. மனைபிரிவில் பள்ளமாக உள்ள பகுதியினை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
9. மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும்.
10. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி x 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைபிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.
12. மனைபிரிவு மனைகள் வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
13. மனைபிரிவு இடம் 1984–ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டபிரிவு 4(1)ன்படி நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நில சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.
14. மனைபிரிவு விதிமுறைகளின்படி கட்டணத்தொகை குறைவாக செலுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால் பிற்காலத்தில் அத்தொகையினை மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
15. மேற்படி நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அனுமதி கடிதத்தின்படி தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 09 மனைகளுக்கு அனுமதி அளித்து இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

1/3/24

தலைவர் / நிர்வாக அலுவலர்,
89–பெருமாள்பட்டு ஊராட்சி,
திருவள்ளூர் ஊராட்சி
ஒன்றியம்

1/3/24

பெறுநர்
திரு. A. சுதாகர் த/பெ ஆறுமுகம்
எண். 5C/7, ஜே.ஜே. நகர் கிழக்கு
அகத்தியர் சாலை, முகப்பேர்,
சென்னை – 37.